**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 172/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | செந்தில்குமார் | த–பெ /க.பெ. | கோவிந்தராஜன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 53/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | நகை தொழில் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2026**

------------------------------------------------------------------------

26.05.2026
**குறுக்கு விசாரணை:**

**1) எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் மலேசியாவில் இருந்து காரைக்குடியில் உணவகம் வைத்திருந்தார், நான் செல்வது மூலமாக தெரியும். எதிரியின் உணவகம் எங்குள்ளது என்றால் அருணா நகரில் கவிதா என்ற உணவகம் வைத்திருந்தார். உணவகத்திதன் உரிமையாளர் யார் என்று தெரியுமா என்றால் எதிரி அவர் மனைவி பெயரில் வைத்திருந்தார், எதிரிதான் அதன் உரிமையாளர். எதிரியின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி மலேசியாவில் உணவகம் வைத்திருந்தாரா என்றால் வைத்திருந்தார். மலேசியாவில் நான் செல்லும்போதும் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மலேசியாவில் காரைக்குடி என்ற பெயரில் உணவகம் வைத்திருந்தார். எதிரியின் குடும்ப நபர்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எதிரியை எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 12 வருடங்களாக தெரியும்.**

**2) எப்போது எங்கு வைத்து என்னிடம் பணம் பெற்றார் என்றால் எனது கடையில்**

வைத்து 25.12.2024 ல் ரூ. 6 லட்சம் மதிப்புள்ள எனது தங்கம் மற்றும் ரூ.4,00,000/- ரொக்கமாக பெற்றார். கடனாகக்கொடுத்தேனா என்றால் கடனாக கொடுத்தேன். வட்டி எவ்வளவு என்றால் 2 ரூபாய். நகையை எதற்காக பெற்றார் என்றால் எதிரியின் மகன் திருமணம் நடைபெற்றது, அப்போது நகை பெற்றார். திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் 12.02.2020 ல் நடைபெற்றது. திருமணத்திற்காக நகைகள் ரூ.6 லட்சம் மதிப்புள்ள நகைகள் பெற்றார் என்றால் சரிதான். நகை தொழில் அப்போது செய்திருந்தேன். தற்போது ஸ்ரீ சீனிவாசா என்ற பெயரில் நான் நகை கடை வைத்துள்ளேன். எந்த தேதியில் ரூ.6 லட்சம் நகையாகவும், ரூ.4,00,000/- கடனா கொடுத்தேன் என்று எனது புகாரில் கூறியுள்ளேன் என்றால் 25.12.2024 என்று கூறியுள்ளேன். அந்த தேதியில் நகையை பெற்றதற்கு ரசீது ஏதாவது வைத்துள்ளேனா என்றால் இல்லை, பழக்கம் என்பதால் கொடுத்தேன். 2024 வருடத்திற்காக வருமான வரி செலுத்தினேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வருமான வரி அறிக்கையில் கடனைப்பற்றி குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. காசோலை தேதி என்னவென்று அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 12.02.2025 ஆகும்.

3) எதிரி பெற்ற கடனை எப்போது திருப்பி தருவதாக கூறினார் என்றால் திருமணம் முடிந்த நான்கு நாட்களில் தருவதாக கூறினார், மொய் பணத்தில் இருந்து தருவதாக கூறினார். 2020 ல் எதிரியின் மகனின் திருமணம் நடைபெற்றதாக கூறியிருக்கும்பட்சத்தில் எதற்காக 2025 ல் காசோலை கொடுத்தார் என்றால் திருமணம் எப்போது என்று குறிப்பாக எனக்கு தெரியாது. காசோலை கொடுத்த தேதியில் எதிரி மலேசியாவில் இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கமாக மலேசியா செல்வார். காசோலை கொடுத்ததாக சொல்லும் தேதியில் வீட்டு பத்திரம் கொடுத்தாரா என்றால் சரியல்ல, பணம் கொடுக்கும்போது ஆவணம் பெற்றேன், இடைப்பட்ட காலத்தில் அதை விற்பதாக கூறி என்னிடம் ஆவணத்தை திருப்பி பெற்றார். கடன் தொகையை திருப்பி எதிரி கொடுக்காத பட்சத்தில் எந்த அடிப்படையில் ஆவணத்தை திருப்பி கொடுத்தேன் என்றால் பணத்தை திருப்பி தருவார் என்ற நம்பிக்கையில் கொடுத்தேன். எதிரி மனைவியின் தங்கையின் வீட்டு மனை பத்திரம்

**ஆகும். எதிரி மனைவியில் தங்கை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி 2021 ல் வாங்கிய கடனை 2022 லேயே அடைத்துவிட்டார் என்றாலும், வட்டியுடன் சேர்த்து அதற்காக 125 கிராம் நகையை திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும் சரியல்ல. எதிரி பெற்ற தொகையை திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும், அதிக தொகைக்காக எதிரியின் காசோலையை நான் நிரப்பி தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.**

சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.26 17:46:03 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.